DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : தமிழ்மணி | Father Name : பெருமாள் |
| Age : 58 | Village : திருமங்கலம், மதுரை |
| Taluk : | Calling : தொழில் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26 Feb 2026 16:45

**<u>எதிரியின் முதல் விசாரணை</u>** :-

1. நான் திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள சக்தி முருகன் நான் அவரிடம் ரூபாய் 5,00,000/- கடன் வாங்கியதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். ஆனால், நான் அவரிடம் கடன் வாங்கவில்லை. நான் கூறும் நபர்களுக்கு அவர் கடன் கொடுத்தார், அந்த கடனுக்கு மாதம் மூன்று பைசா வட்டி வீதம் கடன் வாங்கி செல்வகணேஷ் மற்றும் முருகேஸ்வரி ஆகியோர் சக்தி முருகனின் மனைவி வங்கிக்கணக்கில் பணம் செலுத்தி வந்தார்கள். செல்வகணேஷ் முருகேஸ்வரியின் மகன் ஆவார். அவர்களுக்கு வாதி சக்தி முருகன் கடன் கொடுத்ததற்கு என்னிடம் ஆவணம் இருக்கிறது.

2. அவர்கள் மூன்று மாதம் வட்டி கொடுக்காத காரணத்தினால் அவர்கள் மீது வழக்கு போடுவதற்கு பதில் என் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். செல்வகணேஷ் மற்றும் முருகேஸ்வரி ஆகிய இருவரும் கொடுக்க வேண்டிய வட்டி பணத்தை கொடுக்கவில்லை என்று சக்தி முருகன் என்னிடம் கேட்டபோது நான் திருமங்கலம் காவல் நிலையத்தில் மேற்படி செல்வகணேஷ் மற்றும் முருகேஸ்வரி ஆகியோர் மீது புகார் கொடுத்துள்ளேன். அதற்கான ஆவணம் என்னிடம் இருக்கிறது. நான் காவல் நிலையத்தில் 26.10.2024 ஆம் தேதி மேற்படி செல்வ கணேஷ் மற்றும் அவருடைய தாயார் முருகேஸ்வரி மீது புகார் கொடுத்ததற்கு காவல் நிலையத்தில் இருந்து கொடுத்தார் ரசீது எண்.1018/2024 ஐ நான் நீதிமன்றத்தில் என் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். **<u>(எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)</u>**.

3. மேற்படி செல்வகணேஷ் மற்றும் முருகேஸ்வரி ஆகியோர்கள் வாதி சக்தி முருகன் பணம் கொடுக்கவில்லை என்று அவர் என்னிடம் வந்து கேட்டபோது நான் வாதி சத்தி முருகனை செல்வகணேஷ் மற்றும் முருகேஸ்வரி வீட்டிற்கு சுமார் 4, 5 முறை அழைத்துச் சென்றுள்ளேன், ஆனால், சக்தி முருகன் தற்போது செல்வகணேஷ் மற்றும் முருகேஸ்வரியை தனக்கு தெரியாது என்று மறுக்கிறார். வாதியிடம் செல்வகணேஷ் மற்றும் முருகேஸ்வரி கடன் வாங்கிய விபரங்களை அவர்களே நீதிமன்றத்திற்கு வந்து கூறுவார்கள். நான் சக்தி முருகனிடம் கடன் எதுவும் வாங்கவில்லை, ஆனால் என் மீது இந்த வழக்கை தேவையில்லாமல் போட்டு எனக்கு மன உளைச்சலை ஏற்படுத்துகிறார்.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

4. வாதி சக்தி முருகனை எனக்கு ஐந்து ஆண்டுகளாக தெரியும். நான் இதற்கு முன்பு அவரிடம் கடன் வாங்கி அதை திருப்பிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லும் நபர்களுக்கு அவர் கடன் கொடுப்பாரா என்றால் செல்வகணேஷ் என்பவருக்கு மட்டும் நான் கடன் கொடுக்க கூறியதன் பெயரில் அவர் கடன் கொடுத்தார். இந்த வழக்கு காசோலை என்னுடைய வங்கிக் கணக்கிலிருந்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான் என்றால் சரிதான், ஆனால் அதில் தொகை எழுதப்பட்டுள்ள கையெழுத்து என்னால் எழுதப்பட்டதல்ல. செல்வகணேஷ்க்கு வாதி சக்தி முருகன் கடன் கொடுத்ததாக கூறுவதற்கு என்னிடம்

ஆவணம் எதுவும் இல்லை என்றாலும், அதனால் தான் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல, அந்த ஆவணம் சக்தி முருகனிடம் இருக்கிறது.

5. செல்வகணேஷ்க்கும் முருகேஸ்வரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. அவ்வாறு அவர்களுக்கு தொடர்பு இருந்தால் அவர்கள் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிப்பார்கள் என்றால் அவர்கள் வந்து சாட்சியம் அளிப்பார்கள். இந்த வழக்கு காசோலையை நான்தான் சக்தி முருகனிடம் கொடுத்தேன் என்றால் செல்வகணேஷ்க்கு பணம் கொடுக்கும் போது அவரும் அவருடைய காசோலையை கொடுத்தார், சாட்சிக்காக நான் என்னுடைய காசோலையை சக்தி முருகனிடம் கொடுத்தேன். நான் இந்த வழக்கு சம்பந்தமாக சக்தி முருகனுக்கு பணம் எதுவும் கொடுத்துள்ளேன் என்றால் நான் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் கொடுக்கவில்லை.

6. நான் காவல் நிலையத்தில் சக்தி முருகன் மீது புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் திருமங்கலம் காவல் நிலையத்தில் சக்தி முருகன் செல்வகணேஷ் மற்றும் முருகேஸ்வரிக்கு கொடுத்த பணத்தை அவர்கள் திருப்பி கொடுக்கவில்லை என்று புகார் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், அவ்வாறு கொடுத்திருந்தால் அந்த புகார் மனு நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருமங்கலம் காவல் நிலையத்தில் இருந்து கொடுக்கப்பட்ட புகார் மனு ஏற்பு ரசீதில் "மனுதாரருக்கும் எதிர்மனுதாரர்களுக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான பிரச்சனை ஏற்பட்டதாக புகார் மனு" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் திருமங்கலம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் சக்தி முருகன் பற்றி எதுவும் கூறவில்லை என்பதால் தான் அந்த புகாரை இந்த வழக்கில் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல.

7. செல்வகணேஷ்க்கு பணம் கொடுத்ததாக கூறும் போது நானும் உடன் சென்றேனா என்றால் சென்றேன், எங்களுடன் ராஜலட்சுமி என்ற ஆசிரியரும் வந்திருந்தார். எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் கார் சென்றோம், அந்த காரை ஓட்டுநர் தான் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். அப்பொழுது நான் என்னுடைய காசோலையை கொண்டு சென்றேன் என்றால் சரிதான், நான் தொழில் செய்வதால் எப்பொழுதும் என்னிடம் என்னுடைய காசோலை இருக்கும். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன்.

8. நான் வழக்கு காசோலையை சக்தி முருகனிடம் தான் கொடுத்தேன் என்றாலும், இந்த செல்வ கணேஷுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

26 Feb 2026 17:09

Judicial Magistrate 2, Sattur.